அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளையாபுரத்தில் ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. அவற்றோடு மாத்திரமல்லாமல் சுற்றியிருக்கிற கிராமப்புறங்களிலும் கால்நடைகள் வளர்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, கருணையும், காருண்யமும் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள அந்த எடையபட்டி கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கால்நடைத் துறை விதிகளுக்குட்பட்டு, அங்கே அதிக கால்நடைகள் இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

202—

பிரம்மோற்சவ விழா

***36186—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், கும்பமுனிமங்கலம் அருள்மிகு ஸ்ரீஅகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழாவினை நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS

[2014 ஜூலை 21

இந்தியாவில் கங்கையாறு, யமுனையாறு, பாலாறு என்று பல ஆறுகள் உண்டு. ஆனால், வற்றாத ஒரே ஆறு மாண்புமிகு அம்மா அவர்களின் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடி வணங்கி விடையை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால், தமிழகத்து திருக்கோயில்களில் தினசரி முறையான பூஜை, அன்னதானம், திருவிழா மற்றும் குடமுழுக்கு என்ற நான்கும் நடைபெறுவதால் ஏற்றமும் மாற்றமும் பெற்று விளங்குவதை இந்த நாடு நன்கறியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள திருக்கோயில் சட்டப் பிரிவு 46(I)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் வருமானம் சுமார் ரூபாய் 2 இலட்சத்திற்குட்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற திருவிழா நடைபெற அவசியத் தேவையாக இருப்பது இறைவன் வீதியுலா செல்லும் வாகனங்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் இத்திருக்கோயிலின் ஏழு வாகனங்களில் பழுது நீக்கப்பட்டு புதிய பொலிவுடன் இறைவன் வீதியுலா வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயிலில் ஆண்டுத் திருவிழா நடத்துவதற்கு உபயதாரர்கள் கண்டறியப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவிழா எதிர்வரும் பங்குனி மாதத்தில் நடைபெறும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன், மக்களால் நான், மக்களுக்காக நான் என்று சூளுரைத்து, மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் வழிகாட்டி,

முதல்வருக்கெல்லாம் முதல்வராக முல்லைப் பெரியாறின் உரிமைகளை மீட்டெடுத்த தாயே, எங்களின் குல சாமி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி கும்பமுனிமங்கலத்தில், ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த இத்திருக்கோயில் அருள்மிகு ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் திருக்கோயில் பங்குனி பிரம்மோற்சவ விழாவை பொன்னேரிப் பகுதி பக்தர்கள் மட்டுமின்றி சுற்றுவட்டக் கிராமங்களைச் சேர்ந்த பக்தர்களும் எதிர்நோக்கியுள்ளார்கள். இவ்விழா தொடர்ந்து நடைபெறாமல் உள்ளதாலேயே திருவிழா வாகனங்கள் மற்றும் பூசைக்குரிய பொருட்கள், செப்பில் தங்கமுலாம் பூசப்பட்ட மூன்று ரிஷப வாகனங்களும், மரத்தாலான மயில் வாகனமும், ஒரு மூஞ்ஜெலி வாகனமும், பெரிய மூஞ்ஜெலி வாகனம் ஒன்றும் பழுதடையும் நிலையில் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று இத்திருக்கோயிலுக்கு 11 உபயதாரர்கள் இந்த வருடம் பங்குனி மாதம் பிரம்மோற்சவ விழாவினை நடத்த முன்வந்திருக்கிறார்கள் என்பதையும், 10 நாட்களுக்கு காலை, இரவு என்று 20 வேளையும், ஒரு வேளைக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும், பொன்னேரி தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இம்மாமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையிலே சுமார் ஆயிரம் வருடம் பழமையும் பெருமையும் வாய்ந்த இத்திருக்கோயிலின் 3 பக்கம் மதில் சுவர்கள் பழுதடைந்துள்ளன. சில சாமி சிலைகள் கை, கால் உடைந்த நிலையில் உள்ளன. இவற்றை சரி செய்து, வர்ணம் பூசி, பக்தர்கள் இரவில் தடையின்றி வழிபடவும், பொன்னேரியில் மட்டுமின்றி தமிழகத்திலே பழமையும் பெருமையும் வாய்ந்த தற்போது பழுதடைந்துள்ள அனைத்துக் கோயில்களையும் உயர்திரு அறநிலையத் துறை ஆணையர் அவர்களின் பொது நிதியிலிருந்து சீரமைக்க. . .

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. பொன். ராஜா: திருக்கோயில்களில் பக்தர்கள் பசியாற அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்த எங்கள் கண்கண்ட

தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களின் அரசு உதவிபுரிய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு ஸ்ரீ அகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில், பொன்னேரி வட்டம், கும்பமுனிமங்கலம் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தது. இத்திருக்கோயில், சட்டப் பிரிவு 46(1)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆண்டுத் திருவிழா பிரம்மோற்சவம் நடைபெற்று சுமார் 100 ஆண்டுகள் கடந்துவிட்டன என்று தெரியவந்துள்ளது. ஆனால், திருக்கோயில்களின் பாதுகாவலராக இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்கள் அரியணையில் அமர்ந்த பிறகுதான் தமிழகத்தில் பல்வேறு திருக்கோயில்களில் அன்னதானம், திருவிழா, குடமுழுக்கு, ஏழைகளுக்குத் திருமணம் என்று நித்தம், நித்தம் புதுப் பொலிவோடு கோயில்கள் சிறந்து விளங்குவதை அனைவரும் நன்கறிவார்கள். இந்த வகையில் இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான 7 வாகனங்கள் பழுது நீக்கப்பட்டு, ஆண்டுத் திருவிழாவிற்குத் தேவையான உபயதாரர்கள் கண்டறியப்பட்டுள்ளார்கள். இத்திருக்கோயிலில் சுமார் 11 உபயதாரர்கள் மனமுவந்து திருவிழா செய்ய முன்வந்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டியுள்ள ஆண்டுத் திருவிழா மிகவும் சீரும், சிறப்புமாக தங்கத் தாரகை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்வாழ்த்துகளோடு எதிர்வரும் பங்குனி மாதத்தில் நடைபெறும் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கின்றேன்.*